








**We Shine Academy™**

guiding you to get through

# நடப்பு நிகழ்வுகள்
# (CURRENT AFFAIRS)
## டிசம்பர் - 2019

*We Are Here..!! To Guide You..!!*







# WeShine Study Circle

# TNPSC

## நடப்பு நிகழ்வுகள்

## (CURRENT AFFAIRS)

## டிசம்பர் - 30.12.2019

Main Office @

**WeShine Study Circle**
Chrompet, Chennai
Phone: 8939144344, 8939244344

Branch Office @

**WeShine Study Circle**

Plot No: 47/60, "AK" Block,
7th Main Road, Anna Nagar
Chennai, Tamil Nadu – 600 040.

3rd Floor, West Wing, GokulArcarde,
No.2, Sardar Patel Road, Adyar
Chennai, Tamil Nadu– 600020.

https://weshineacademy.com

# பொருளடக்கம்

- தேசிய நிகழ்வுகள்
- விளையாட்டு நிகழ்வுகள்
- விருதுகள்







We Shine Academy™

# தேசிய நிகழ்வுகள்

- **மாணவர்களுக்கான "தீக்ஷா" செயலில் 400 எளிய அறிவியல் சோதனைகளை உள்ளடக்கிய வீடியோக்கள் பதிவேற்றப்பட்டுள்ளன.**
  - இதில் சிபிஎஸ் இ முதல் அனைத்து மாநில பாடத்திட்டங்கள் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளன.
  - **செய்தி துளிகள்**
    - தீக்ஷா இணையதளம் மத்திய மனிதவள மற்றும் மேம்பாட்டு அமைச்சகம் 2017ஆம் ஆண்டு கல்வி முறையை டிஜிட்டல் மயமாக்க அறிமுகப்படுத்தப்பட்டது.
    - இதன் நோக்கம் "சப்கோ ஷிக்ஷா ஆச்சி சிக்ஷா" என்பதாகும் (Sabko Shiksha our Acchi Shiksha) மாற்றத்தை கற்பித்தல் அதிகாரம் கற்பித்தல் மற்றும் வழிநடத்த கற்றுக்கொள்வது" (teach to transform, educate to empower and learn to lead)

- மத்திய உள்துறை அமைச்சர் **புதுடெல்லியில் மத்திய ரிசர்வ் போலிஸ் படையின் (**CRPF) தலைமையக கட்டிடத்திற்கு அடிக்கல் நாட்டினார்

- ○ இது **ரூ.280 கோடி செலவில் புதிய கட்டிடம்** அமைக்கப்படவுள்ளது.
- ○ **செய்தி துளிகள்**
    - ▪ இயக்குநர் ஜெனரல் - ராஜீவ் ராய் பட்நகர்
    - ▪ மத்திய உள்துறை அமைச்சர் - அமித்ஷா

## விளையாட்டு நிகழ்வுகள்

- ரஷியாவின் மாஸ்கோ நகரில் மகளிர் பிரிவில் நடைபெற்ற உலக ராபிட்ட செஸ் சாம்பியன்ஷிப் போட்டியில் இந்திய கிராண்ட்மாஸ்டர் கோனேரு ஹம்பி வெற்றி பெற்று சாம்பியன் ஆனார்.
    - ○ ஆடவர் பிரிவில் நார்வே வீரர் மாக்னஸ் கார்ல்சன் மூன்றாவது முறையாக உலக ராபிட் செஸ் சாம்பியன் பட்டம் பெற்றார்.
    - ○ **செய்திதுளிகள்**
        - ▪ **2017-இல் தமிழகத்தைச் சேர்ந்த விஸ்வநாதன் ஆனந்த் இந்த பட்டத்தை வென்றார்**
        - ▪ உலக ராபிட் செஸ் சாம்பியனான இரண்டாவது இந்தியர் கோனேரு ஹம்பி ஆவார்
        - ▪ கோனேரு ஹம்பி 2002ஆம் ஆண்டு கிராண்ட்மாஸ்டர் ஆனார் மற்றும் 2007ஆம் ஆண்டு பத்மஶ்ரீ விருது பெற்றுள்ளனர்

- மகாராஷ்டிர மாநிலம், நியூபன்வேல் நகரில் நடைபெற்ற

ஆர்.ஆர்.லக்ஷயா கோப்பை ஏர் ரை∴பிள் **துப்பாக்கி சுடுதல் போட்டியில் 10 மீட்டர் சீனியர் பிரிவில் ஐஸ்வரி பிரதாப் சிங் தோமர் தங்கம் வென்றார்.**

## விருதுகள்

- இந்திய சினிமாவின் மிக உயரிய விருதான **"தாதாசாஹேப் பால்கே விருது", பாலிவுட் நட்சத்திரம் அமிதாப் பச்சனுக்கு வழங்கப்பட்டது.**
    - இதனை குடியரசு தலைவர் ராம்நாத் கோவிந்த வழங்கினார்
    - அவருக்கு தங்க தாமரை பதித்த பதக்கம் மற்றும் ரூ.10லட்சம் பரிசு தொகை வழங்கப்பட்டன.
    - **செய்தி துளிகள்**
        - இது 1969 ஆம் ஆண்டு அறிமுகப்படுத்தப்பட்டது
        - இந்த விருது தாதாசகேப் பால்கே என்று பிரபலமாக அறியப்பட்ட "இந்திய சினிமாவின் தந்தை" துண்டிராஜ் கோவிந்த் பால்கே நினைவாக நிறுவப்பட்டது.
        - இதனைப் பெற்ற முதல் நபர் தேவிகா ராணி ஆவார். இவர் இந்திய சினிமாவின் முதல் பெண்மணி என்று அறியப்படுகிறார்.

## திருக்குறள்

**குறள் எண்: 62**

குறள் பால்: அறத்துப்பால்

குறள் இயல்: இல்லறவியல்

குறள் அதிகாரம் : மக்கட்பேறு

**குறள்:**

**எழுபிறப்பும் தீயவை தீண்டா பழிபிறங்காப்**

**பண்புடை மக்கட் பெறின்**

**விளக்கம் :** பிறர் பழித்ததற்கு இடமில்லாத நல்ல பண்புடைய மக்களை ஒருவன் பெறுவானானால், அவனை எழுவகைப் பிறப்புகளிலும் துன்பங்கள் சென்றடையா

We Shine Academy ™